பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 41

திங்கட்கிழமை
06 ஜனவரி 2025

மார்கழி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

போதையில் சாரத்தியம்

## 4 நாள்களில் 38 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 6
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் ☞10

போர்க்குற்றங்கள் தொடர்பில்

# உள்நாட்டுப் பொறிமுறையூடாகவே அரசாங்கம் பொறுப்புக்கூறும்

## வெளிவிவகார அமைச்சு திட்டவட்டம் அறிக்கை வெளியிடுவதற்கும் முடிவு



கொழும்பு, ஜனவரி 6
இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுகள் மற்றும் அதுசார்பான பிரச்சினைகளில், உள்நாட்டுப் பொறிமுறைமூலம் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை வெளிப்படுத்தும் விதமாக சிறப்பு அறிக்கையொன்று விரைவில் வெளியிடப்படவுள்ளது. ☞11



## சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட பொலிஸார் அதீத அக்கறை!

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 6
யாழ்ப்பாணத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுவதில் பொலிஸார் அதீத அக்கறையுடன் உள்ளனர். எனவே, பொதுமக்கள் அச்சப்பட வேண்டியதில்லை என்று யாழ்ப்பாண மாவட்டப்பிரதிப்பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் ☞11

## குப்பைகளை அகற்றாவிட்டால் சட்டநடவடிக்கையா?

அப்படி எதுவும் இல்லை என்கிறது பொலிஸ் திணைக்களம்

கொழும்பு, ஜனவரி 6
வீடுகளுக்கு முன்பாகவுள்ள குப்பைகளை அகற்றாவிடில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளியான செய்திகளை பொலிஸ் தலைமையகம் மறுத்துள்ளது. ☞11

2024ஆம் ஆண்டில் மட்டும்

வவு. சுகாதார அதிகாரிப் பிரிவில்

## 41 பேருக்கு எலிக்காய்ச்சல்

வவுனியா, ஜன. 6
வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் கடந்த 2024ஆம் ஆண்டு 41 பேர் எலிக்காய்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வவுனியா ☞11

கடந்த 11 மாதங்களில்

## 2,937 சிறுவர் துஷ்பிரயோகம்!

கொழும்பு, ஜனவரி 6
கடந்த பதினொரு மாதங்களில் 2 ஆயிரத்து 937 சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன என்று இலங்கைப் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவற்றில், பாலியல் வன்புணர்வு தொடர்பில் ஆயிரத்து ☞10



## நோயாளிகளை ஏற்றிச்சென்ற அம்புலன்ஸ் நேற்று விபத்து!

கிளிநொச்சி, ஜன. 6
முழங்காவில் ஆதார மருத்துவமனையில் இருந்து இரண்டு நோயாளர்களை ஏற்றிச் சென்ற அம்புலன்ஸ் நேற்று இரவு விபத்துக்குள்ளானது. பூநகரிக்கும் பரந்தனுக்கும் இடைப்பட்ட பகுதியில், நெல் மூட்டைகளை ஏற்றிச்சென்ற ☞11

யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

## 2024ஆம் ஆண்டில் 185 உயிர்மாய்ப்புகள்

» 11

வெளிநாட்டுத்தூதர்களிடம்

## முன்னாள் அமைச்சர்கள் லஞ்சம் கோரினார்கள்!

கொழும்பு, ஜன. 6
முன்னைய அரசாங்கத்தில் இருந்த அமைச்சர்கள் சிலர் தம்மிடம் லஞ்சம் கோரியதாக வெளிநாட்டுத் தூதுவர்கள் சிலர் முறைப்பாடு வழங்கியுள்ளனர். ☞11

## மஹிந்தவின் பாதுகாப்புக்கு 6 பொலிஸாரே போதும்!

கொழும்பு, ஜனவரி 6
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக்கு ☞11

## காசோலை மோசடி பெண் கைதானார்!

» 11




'மொட்டு,யானை, திசைகாட்டி எண்டு சின்னங்கள் வேறதான் ஆனால் எல்லாம் ஒரேகுட்டை, ஒரே மட்டைதான்'

## உக்ரைன் போர்க்களத்துக்காக 500 இலங்கையர்கள் கடத்தல்

பேரணி நடத்தி ஜனாதிபதியிடம் மனுவைக் கையளிப்பதற்கும் முடிவு

கொழும்பு, ஜன. 6
ரஷ்யா - உக்ரைன் போர்க்களத்துக்கு இதுவரை சுமார் 500 இளைஞர்கள் இலங்கையில் இருந்து கடத்திச் ☞11

## அரசியலமைப்பு முயற்சிகளில் சர்வதேச மத்தியஸ்தம் தேவை

பேராசிரியர் ரகுராம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 6
ஈழத்தமிழரின் அடிப்படைக் கோட்பாடுகள் தொடர்பில் பேசுவதற்கும், அவற்றைப் பற்றி உரையாடுவதற்கும் அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகள் தொடர்பில் சொல்வதற்கும் சர்வதேச மத்தியஸ்தத்தின் ஊடாக நாங்கள் நகர வேண்டும் என்று யாழ்ப்பா ☞11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுக்கப்பல்களுக்கு விசேட விதிமுறைகள்

## விஜித ஹேரத் தலைமையில் குழு நியமனம்

**கொழும்பு, ஜன.6**

**இலங்கை வருவதற்கு அனுமதிகோரும் உலகநாடுகளின் ஆய்வுக் கப்பல்களுக்கு நிலையான மூலோபாய ஒத்துழைப்பு விதிமுறையின் கீழ் அனுமதியளிப்பது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. இதற்கு அமைவாக விசேட விதிமுறை ஒன்றை உருவாக்குவதற்கு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.**

இலங்கைக் கடற்பரப்புக்குள் வரும் உலகநாடுகளின் ஆய்வுக்கப்பல்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடை கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது. இந்தத் தடையை முந்தைய அரசாங்கம் விதித்திருந்தது.

உலகநாடுகளின் ஆய்வுக்கப்பல்கள் இலங்கைக்கு வருவதால் ஏற்படக்கூடிய இராஜதந்திர நெருக்கடிகளைத் தவிர்க்கும் வகையில் பொதுவானதொரு மூலோபாய ஒத்துழைப்பு விதிமுறையை உருவாக்குவதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதற்கமைய வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான சிறப்புக் குழுவை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நியமித்துள்ளார். (ச-இ)

## பல்கலைகளின் பிரச்சினை பிரதமர் ஹரிணி ஆராய்வு

கொழும்பு, ஜன.6

பல்கலைக்கழகங்களில் காணப்படும் நிர்வாகப் பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து பிரதமர் ஹரிணி அமரசூரிய அரச பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களுடன் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர் குழுவில் காணப்படும் பற்றாக்குறை, மாணவர்களின் விடுதிப் பிரச்சினைகள், மாணவர் நிவாரணக் கொடுப்பனவு செயன்முறைகளை நெறிப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பிரதமர் ஹரிணி கவனம் செலுத்தினார். (ச-45-26)

## தமிழரசுக் கட்சியில் இளையோரே கைகோருங்கள்

### சி.வீ.கே. சிவஞானம் அழைப்பு



யாழ்ப்பாணம், ஜன.6

தமிழரசுக் கட்சியில் இளைய சந்ததியினரையும் பெண்களையும் இணைந்துகொள்ளுமாறு பகிரங்கமாக அழைப்பு விடுப்பதாக கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் அதிகமான சபைகளைக் கைப்பற்றுவதில் இலங்கைத் தமிழரசுக்கட்சி தீவிரமான கவனத்தினைச் செலுத்தியுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் உள்ளக முரண்பாடுகள் காணப்படுகின்றன என்பதற்கு அப்பால் வடக்கு,கிழக்கு மக்களின் பெரும்பான்மையான அங்கீகாரமும் ஆதரவும் கட்சிக்கே உள்ளது.

எதிர்கால சந்ததியினர் கட்சியுடன் கரம்கோர்த்துக் கொள்வதன் ஊடாகவே கட்சியில் உண்மையான மாற்றம் ஏற்படும். அந்தவகையில் உள்ளூராட்சித் தேர்தலில் புதிய முகங்களை உள்ளீர்த்துக்கொள்வதற்குக் கட்சி தயாராகவே உள்ளது - என்றார். (ச-இ)

## அகதிகள் படையெடுத்தால் நெருக்கடி நாட்டுக்கே!

### கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன.6

அகதிகளாக எல்லோரும் இலங்கைக்கு வரமுற்பட்டால் பொருளாதார ரீதியிலும் ஏனைய வகையிலும் ஏற்படக்கூடிய நெருக்கடிகள் பாரதூரமானதாக இருக்க வாய்ப்புகள் உள்ளது என்று கடற்றொழில், நீரியல்வளங்கள் மற்றும் கடல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவுக்கு வந்த ரோஹிங்ய அகதிகள் நாட்டில் தங்க வைக்கப்பட்டிருக்கும் வரையில் அவர்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகவுள்ளது. அவர்களை நாட்டில் வைத்துக் கொள்வதா, இல்லையா என்பது குறித்து நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படுகின்றவழக்குத்தீர்ப்பின்பின்னரேதீர்மானிக்கப்படும். நாட்டில் வைத்திருக்கும் படி நீதிமன்றத் தீர்ப்புக் கிடைத்தால் அதற்குப் பின்னர் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும் - என்றார். (ச-இ)

## ஏதிலிகளை திருப்பியனுப்பல் மனிதாபிமான முறையா?

### எதிர்க்கட்சி கேள்வி

கொழும்பு, ஜன.6

மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் ரொஹிங்ய முஸ்லிம்கள் இலங்கைக்கு வந்தபோது, அப்போதைய அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து மனிதாபிமான ரீதியில் செயற்பட்டது. ஆனால், இந்த அரசாங்கம் மீண்டும் அவர்களை அந்த நாட்டுக்கே அனுப்புவதற்கு முயற்சிக்கிறது. அவ்வாறு செய்தால் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கம் சில விடயங்களைக் கூறி, அவை விமர்சனத்துக்கு உள்ளான பின்னர் அதற்கு மறுப்புத் தெரிவிக்கிறது.

ரொஹிங்ய முஸ்லிம்களுக்கு எதிராக மியான்மரில் முன்னெடுக்கப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் அவதானம் செலுத்தியுள்ளது.

அந்த இனத்தவர்களே தற்போது எமது நாட்டுக்கு வருகைதந்துள்ளனர். அவ்வாறான மக்களை மீண்டும் அந்த நாட்டுக்கே அனுப்பவேண்டும் எனக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

இலங்கையில் ஜே.வி.பி. கலவரத்தின் போது ஆயிரக்கணக்கான மக்கள் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு வெளியேறினர். அவர்கள் அகதிகளாகச் சென்ற நாடுகள் அவர்களைக் கைவிடவில்லையே- என்றார். (ச-இ)

## ஐஸ் போதையுடன் பட்டதாரி கைது

கொழும்பு, ஜன.6

ஒழுங்கமைக்கப்பட்ட போதைப்பொருள் கடத்தல்காரரினூடாக போதைப்பொருள்களை விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட 20 வயதுடைய பட்டதாரி யுவதியொருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டாரென ஹன்வெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த யுவதி, இரண்டு தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டங்களைப் பெற்றுள்ளேன் என்றும் வெளிநாடு செல்வதற்குத் தேவையான பணத்தைத் திரட்டுவதற்காகப் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவந்தேன் எனவும் விசாரணையில் தெரிவித்துள்ளார். (ச-இ)

## தமிழ் மக்களின் நலலை பகடைக்காயாக்கக்கூடாது

### சத்தியலிங்கம் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.6

தனிப்பட்ட அரசியல் நலன்களுக்காக தமிழர் நலன்களைப் பகடைக்காயாக்க முடியாது. தமிழர் பிரச்சினைக்கான தீர்வு குறித்து சகல தமிழ்த்தரப்புகளும் ஒன்றிணைந்துதான் செயற்படவேண்டும். அதுவே எமது கட்சியின் நிலைப்பாடாகும் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசமைப்பு உருவாக்கம் என்று வருகிறபோது ஏற்கனவே தயாரிக்கப்பட்ட வரைவு உள்ளடங்கலாக மேலும் பல முன்மொழிவுகள் மற்றும் வரைவுகள் இருக்கின்றன.

எனவே தமிழ்த்தேசியக்கட்சிகள் ஒன்றிணைந்து அவையனைத்தையும் ஆராய்ந்து, அவற்றில் உள்ள சிறந்த விடயங்களை உள்ளடக்கி, எமது அடிப்படைக் கோட்பாட்டில் இருந்து விலகாமல், தற்காலச் சூழலுக்கு ஏற்ற வாறான புதிய முன்மொழிவொன்றை ஒருமித்துத் தயாரிக்க வேண்டும். இங்கு தனிப்பட்ட அரசியல் நலன்களுக்காக தமிழர் நலன்களைப் பகடைக்காயாக்கமுடியாது என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனி உற்பத்தியை உயர்த்த நடவடிக்கை

கொழும்பு, ஜன.6

நாட்டில் சீனி உற்பத்தியை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

லங்கா சீனி கம்பனிக்கு சொந்தமான பெல்வத்த மற்றும் செவனகல சீனித் தொழிற்சாலைகளுக்கு கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி நேற்று முன்தினம் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது, கரிம உரம் மற்றும் ஏற்றுமதிச் சந்தையை இலக்காகக் கொண்டு கரிம சீனி உற்பத்தி தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், சீனி உற்பத்தியை விநியோகிப்பதற்கான முறையான விநியோக வலையமைப்பை உருவாக்குவது மற்றும் தொழிலாளர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்க வேலை சுட்டெண்ணைத் தயாரிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளன. (ச-இ)

# கிருமிநாசினிகள் கடத்தல் சந்தேகநபர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 6

வேலணைப் பகுதியில் நேற்றுமுன்தினம் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த மூவரை பொலிஸார் வழிமறித்து சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தினர். அதன்போது இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட கிருமிநாசினி கள் கைப்பற்றப்பட்டன. பெறுமதிவாய்ந்த கிருமிநாசினியுடன் கைதான மூவரையும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

அவர்களைக் கைதுசெய்து நேற்று நீதிமன்றில் முற்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ச-125)

# மாவா பாக்குடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜன.6

மாவா பாக்குடன் இளைஞர் ஒருவரை மானிப்பாய் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

சங்கானைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கைகளின்போதே சந்தேகநபரிடமிருந்து பொலிஸார் 15 கிராம் மாவா பாக்கை மீட்டனர்.

சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார்தெரிவித்தனர். (ச-125)

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சியில் துயரம்

கிளிநொச்சி, ஜன.6

அறுவடை இயந்திரத்தினூடாக நீர் சுத்திகரித்தபோது மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி - முரசுமோட்டை கோரக்கன்கட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

பிரான்சித் ரஜீவன் (வயது-31) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-113)




# போதைமாத்திரைகளுடன் வவுனியாவில் இருவர் கைது

வவுனியா, ஜன.6

மறைத்துவைக்கப்பட்ட நிலையில் ஒருதொகைப் போதைமாத்திரைகளுடன் இருவரை வவுனியா விசேட அதிரடிப்படையினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

வவுனியா பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாந்தோட்டை நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தை வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் வழிமறித்து சோதனையிட்டபோதே பெருமளவான போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன. அத்துடன் அதனை உடைமையில் வைத்திருந்த தென்பகுதிகளைச் சேர்ந்த இரண்டு நபர்களைக் கைதுசெய்து வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ச-110)

# போதைமாத்திரைகளுடன் மன்னாரில் இளைஞன் கைது



மன்னார், ஜன.6

மன்னார் - முருங்கன் பஜார் பகுதியில் 200 போதைமாத்திரை வில்லைகளுடன் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் அவர்கள் முருங்கன் பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் சிலாபத்துறைப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே கைதுசெய்யப்பட்டார். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முருங்கன் பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)




அறக்கப் பறக்கப் பாடுபட்டாலும் படுக்கப் பாயில்லை எண்ட நிலைமையிலதான் தோட்டம் செய்யிற ஆக்கள் இருக்கினம். மழை வந்து அழிச்சது போக மிஞ்சி நிக்கிற பயிர்களில வாறதுகளைக் கொண்டு போய் சந்தையில குடுத்தால்தான் தோட்டம் செய்யிற வைக்குக் கையில ஏதாவது மிஞ்சும். என்னதான் இப்ப மரக்கறியள் நெருப்புவிலையெண்டாலும், அதை வைச்சு லாபம் பாக்கிறளவுக்கு தோட்டங்களில காய்கறியள் இருக்கவேணுமே. முந்தி மூடைக்கணக்கில கொண்டுபோனவையெல்லாம், இப்ப சொப்பிங் பையுக்கதான் கொண்டுபோய் சந்தையில குடுக்கினம். அந்தளவுக்கு பயிர்களும் காய்க்கிறது ஓய்ஞ்சு போட்டுது. இதால தோட்டம் செய்யிறவைக்கும் போட்ட முதல் வந்துசேருமோ எண்ட கவலை, மரக்கறியளை வாங்கிற சனத்துக்கு இந்தளவு விலையில வாங்கி சமைக்கத்தான் வேணுமோ எண்ட யோசினை. இப்பிடி எல்லாரும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கேக்க, ஒரு குரூப்மட்டும் எப்பவும் கலாதியாச் சிரிச்சுக் கொண்டிருக்குது. அவைதான் தோட்டக்காரரிட்ட மரக்கறியளைச் சந்தையில வாங்கி, சனத்துக்கு விக்கிற ஆக்கள். அவைக்கு இருந்த இடத்தில எப்பவுமே லாபத்துக்கு குறைவில்லை. அப்பிடி லாபம் பாக்கிறவை இப்பதான் மழை வந்து மிதிச்சுப் போட்ட தோட்டக்காரரை, இந்த விலைவாசியிலயெண்டாலும் கொஞ்சம் லாபம் பாக்க விடுவம் எண்டு மனமிரங்குகினம் இல்லையாம் .

அப்பிடி என்னதான் உந்த இடைத்தரகர்மார் செய்யினம்? வேறையென்ன, உந்தப் பத்து வீதக் கழிவுதான். பச்சைமிளகாய் இப்ப ஒரு கிலோ ஆயிரத்து இருநூறு ரூபாவுக்கு யாவாரிமார் விக்கினம். ஆனால் தோட்டக்காரரிட்ட ஆயிரம், எண்ணூறு ரூபா எண்டுதான் வாங்குகினம். அப்பிடி வாங்கேக்க கூட பத்துக் கிலோ பச்சைமிளகாயில ஒருகிலோவைக் கழிவு எண்டு சொல்லி, 9 கிலோ மிளகாய்க்கு எண்ணூறு ரூபாப்படி ஏழாயிரத்து இருநூறு ரூபாதான் குடுப்பினம். பிறகு அந்தப் பத்துக்கிலோவையும் ஒரு கிராம் கூடக் கழிக்காமல் சனத்துக்கு 12 ஆயிரத்துக்கு வித்து, சுளையா இருந்த இடத்திலேயே 5 ஆயிரம் ரூபா லாபம் பாப்பினம்.

இதில அவை கழிவெண்டு ஒதுக்கின ஒரு கிலோ மிளகாய்க்கும் முழுசா 1200 ரூபா வரும். இப்பிடி ஒரு பத்து தோட்டக்காரரிட்ட கழிவெண்ட பேரில ஒவ்வொரு கிலோ வெட்டினாலே, முதலீடே இல்லாமல் 12 ஆயிரம் ரூபா அவைக்கு மடியில வந்துவிழும். ஆனால் தோட்டக்காரர்தான் பாடுபட்டதுக்கு பலனை அனுபவிக்காமல் நட்டப்படவேணும். இந்தப் பத்துவீதக் கழிவை நிப்பாட்டவேணும் எண்டு எத்தினையோ ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலயும் தீர்மானங்கள் எடுத்தவை. கொஞ்சக்காலம் அதை நடைமுறைக்கும் கொண்டு வந்தவை. ஆனால் போகப்போக பழைய குருடி கதவைத் திறந்தமாதிரி, எல்லா இடமும் இந்தப் பத்துவீதக் கழிவை கொண்டந்து தோட்டக்காரரின்ர வயித்தில அடிச்சுக்கொண்டுதான் இருக்கினம். ஊழலை ஒழிக்கிறம், ஊழலைக் கொளுத்திறம் எண்டெல்லாம் வீரவசனம் கதைக்கிற திசைக்காட்டிக்காரர், இப்பிடி ஒவ்வொருநாளும் சந்தையில நடக்கிற இந்த பத்துவீதக் கழிவுக்கு முடிவு கட்டினாலே மரக்கறி விலையள் கொஞ்சம் குறைஞ்சு, சனங்களும் சந்தோசமாச் சாப்பிடுங்கள் எல்லோ. ஊழலை மேல் மட்டத்தில இருந்துதான் திசைகாட்டிக்காரரால ஒழிக்க முடியேலை. குறைஞ்சது இப்பிடிச் சந்தைமட்டத்தில யாவது ஒழிக்க வருவினமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்து விடும். மனதில் அடிக்கடிக் குழப்பம் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**இடபம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்கு வெளியூரில் உள்ள கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். தாய்வழி உறவுகளுக்காகச் செலவு செய்யவேண்டி வரும்.

**கடகம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். நண்பர்களின் சந்திப்பு ஆதாயம் தருவதாக இருக்கும். வியாபாரத்தில் பணியாளர்களால் பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயல்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**துலாம்:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக் கொள்வார்.


**விருச்சிகம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே பரஸ்பரம் அதிகரிக்கும்.

**தனுசு:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். மூத்த சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

**மகரம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச்செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கும்பம்:** மனதில் தைரியமும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயல்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியைக் காலையிலேயே தொடங்குவது நல்லது.





# மானிப்பாய் மருதடியில் கஜமுகாசுர சங்ஹாரம்

மானிப்பாய், ஜன.6

யாழ்ப்பாணம் - மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தானத்தில் கஜமுகாசுர சங்ஹார உற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது பாரம்பரிய மானாட்டம், குதிரையாட்டம், மயிலாட்டம், சிலம்பம், பொய்க்கால் நடனம், மற்றும் கரகம் என்பன நடைபெற்றன. (ச-45-27)

# உயிர்ப்பல்வகைமை பயணவழிக் கற்றல்!

யாழ்ப்பாணம், ஜன. 6

நல்லூர்ப் பிரதேச செயலகம், சி.சி.எச். நிறுவனம் மற்றும் இயற்கை ஊக்குவிப்புக் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் கிழக்கு அரியாலைப் பகுதியில் பறவைகள் அவதானிப்பு மற்றும் உயிர்ப்பல்வகைமைப் பயணவழிக் கற்றல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உயிர்ப்பல்வகைமை, பறவைகள் அவதானிப்பு, இயற்கையுடன் பயணிப்பதால் ஏற்படும் உளவியல் மாற்றங்கள், இயற்கைக்கான சமூகத்தின் பங்களிப்பு, இயற்கையுடன் ஒன்றிய மனித வாழ்வியல் போன்ற விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டன. நிகழ்வில் பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், கழக உறுப்பினர்கள் ஆகியோர் பங்குபற்றினர். (ச-25)





# வானரங்கச் சொற்போர் இலங்கை அணி தகுதி

கோலாலம்பூர், ஜன.6

மலேசியாவிலுள்ள திரங்கானுப் பல்கலைக்கழகம் நடத்தும் அனைத்துலக வானரங்கச் சொற்போர் போட்டியில் இலங்கை சார்பாக பங்குபற்றிய அணி இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்ட அறிவியல் தமிழ் அணியே இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

இந்த அணி முதல் மூன்று சுற்றுக்களிலும் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய அணிகளுடன் போட்டியிட்டு தற்போது இறுதிச்சுற்றுக்குத் தெரிவாகியுள்ளதோடு, இறுதிச்சுற்று இந்தியாவுடன் நடைபெறவுள்ளது.

போட்டியில் இலங்கை அணி சார்பில் மோகனராஜ் ஹரிகரன், கிளிநொச்சியைச் சேர்ந்த நகுலகுமார் அபிராமி, கலைச்செல்வன் யூலியட், சிவகுமார் திசான் ஆகியோர் பங்குபற்றியுள்ளனர். (ச-45-214-113)

# கீரைச்செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஜன. 6

வலி.கிழக்குப் பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் கீரைச் செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர். நீர்வேலி, கோப்பாய், சிறுபிட்டி, புத்தூர் போன்ற பிரதேசங்களில் செய்கையாளர்கள் கீரையை பயிரிட்டு வருகின்றனர்.

அதேவேளை சந்தைக்குத் தற்போது அதிகளவிலான கீரைகள் கொண்டுவரப்படுவதனால் அவற்றின் விலையும் சரிவடைந்துள்ளது. (ச-25,17)

# கஜமுகாசுர சங்ஹாரம்

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தானத்தில் கஜமுகாசுர சங்ஹாரம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது இலட்சார்ச்சனை நிறைவு உற்சவம் மற்றும் விசேட ஹோமப் பூசைகளும் நடைபெற்றன. (ச-45-27)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

"கற்றவர்களிடம் கற்பதைவிட
கற்றுக்கொண்டிருப்பவர்களிடம் கற்றுக்கொள் "

– கார்ல் மார்க்ஸ்–

## சிங்கப்பூரும் சிறிலங்காவும்

சிங்கப்பூரின் சிற்பி என வர்ணிக்கப்படுபவர் லீ குவான் யூ. மலேசியாவின் மாநிலமாக இருந்த சிங்கப்பூரில் எந்த இயற்கை வளங்களும் இருக்கவில்லை. இதனால் சிங்கப்பூரை ஒரு வேண்டாத சுமையாகக் கருதியது. 1964 இல் அங்கு ஒரு இனக்கலவரம் ஏற்பட்டதைச் சாக்காக வைத்து, சிங்கப்பூருக்கு கட்டாய விடுதலை கொடுத்து கைகழுவியது மலேசியா. அப்போது சிங்கப்பூரின் முதலமைச்சராக இருந்த லீ குவான் யூ என்னசெய்வதென்று தெரியாமல் கண்ணீர் விட்டே அழுதார். பின்னர் சிங்கப்பூரை முன்னேற்றிக் காட்டுவது என முடிவெடுத்தார். இந்தக்காலகட்டத்தில் இலங்கைக்கும் வந்திருந்த லீ குவான் யூ 'இலங்கையைப் போல சிங்கப்பூரையும் மாற்றிக் காட்டுவேன்' என்று சபதம் செய்திருந்தார். இன்றோ 'சிங்கப்பூரைப் போல நாம் மாறவேண்டும்' என்ற நிலை இலங்கைக்கு வருமளவுக்கு , அபிவிருத்தியிலும், பொருளாதாரத்திலும் உச்சத்தில் இருக்கிறது சிங்கப்பூர். இதற்கெல்லாம் காரணம் ஒன்றே தான். லீ குவான் யூவின் தூரநோக்கான, தெளிவான திட்டங்களும், அவற்றைச்சமரசமற்று நடைமுறைப்படுத்தியவிதமும் தான்.

ஊழலற்ற, தூய்மையான நாட்டை உருவாக்கவென 1968 இல் லீ குவான் யூ அறிமுகப்படுத்திய திட்டம்'தூய சிங்கப்பூர்'. நிர்வாகக் கட்டமைப்புகளில் இருந்த கறைபடிந்த ஊழல்வாதிகளை அகற்றுதல், வினைத்திறனாக மக்களுக்குத் துரித சேவைகளை வழங்குதல், கண்ட கண்ட இடங்களில் குப்பை கொட்டுதலையும் எச்சில் துப்புவதையும் தடைசெய்தல், அதிக புகை கக்கும் வாகனங்களின் உரிமங்களை ரத்துச்செய்தல் என்று பல செயற்பாடுகள் இந்தத் திட்டத்துக்குள் உள்ளடங்கின. இவற்றை மீறுவோருக்கு மிக அதிமான அபராதம் விதிக்கப்பட்டது. இதனால் மிகச் சிலவருடங்களிலேயே சிங்கப்பூர் வளர்ச்சியடைந்த நாடாக மாறி, இன்றைக்கும் சுத்தத்துக்கு உதாரணமாக உலகநாடுகளால் கொண்டாடப்படுகின்றது.

கானமயிலாடக் கண்டு வான்கோழியும் தன் பொல்லாச் சிறகை விரித்தது போல, சிங்கப்பூரில் லீ குவான் யூ செய்த மாற்றத்தை இலங்கையில் கொண்டுவர தேசிய மக்கள் சக்தி நினைக்கிறது. அப்படி நினைப்பதில் தவறில்லைத்தான். ஆனால் அவரது திட்டங்களை அப்படியே பிரதி செய்தாலும், அதனை எந்தளவுதூரம் பொருத்தமான வகையில் நடைமுறைப்படுத்துவார்கள் ? எனத் தெரியவில்லை. குறிப்பாக லீ குவான் யூ 'தூய சிங்கப்பூர்' என்ற திட்டத்தைக் கொண்டுவந்ததைப் போல, அதே பெயருடன் 'தூய இலங்கை' என்ற திட்டத்தை தேசிய மக்கள் சக்தி 2025 இல் அறிமுகப்படுத்தியிருக்கிறது. இந்தத் திட்டமும் ஊழலற்ற, தூய்மையான நாட்டை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், அதை நடைமுறைப்படுத்துவதில் லீ குவான் யூ காட்டிய தீவிரத்தனமும், இறுக்கமும் தேசிய மக்கள் சக்தியினரிடம் காணாமல் போயிருக்கின்றன. இந்தத் திட்டத்தின் மூலம் எவரும் கைதுசெய்யப்பட மாட்டார்கள் என்றுவேறு அரசாங்கம் அறிவித்திருப்பதால், இதை நாட்டில் உள்ள எல்லோரும் பயபக்தியோடு கடைப்பிடிக்க மாட்டார்கள். வெறுமனே வீதியோரங்களிலும், அலுவலகங்களிலும் உள்ள புல், பூண்டுகளைச் சிரமதானம் மூலம் அகற்றுவதோடு 'தூய இலங்கை' திட்டம் நிறைவுக்கு வரவே சந்தர்ப்பங்கள் அதிகம். அதை விடுத்து, லீ குவான் யூவைப் போல நிர்வாகக் கட்டமைப்பு, வெளிப்புறச்சூழல் என அனைத்தையும் தூய்மையாக்குவதோடு, அவற்றை மிக இறுக்கமாகவும் நடைமுறைப்படுத்த வேண்டும். மீறுவோர் மிகக்கடுமையாகத் தண்டிக்கப்படவும் வேண்டும்.அப்படியில்லாமல் மேம்போக்காக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால்,'நாங்களும் சிங்கப்பூர் போல திட்டங்கள் கொண்டுவந்தோம்' என்று சொல்லிக்கொள்ள மட்டும் உதவுமே தவிர, எந்தப் பயனையும் தராத திட்டமாக 'தூய இலங்கை' திட்டமும் குப்பைக் கூடைக்குள் கடாசப்பட்டு விடும்.




## போக்குவரத்துத் திட்டங்கள் பொலிஸாரால் நடைமுறை

**கொழும்பு, ஜன.6**

**'தூய இலங்கை' திட்டத்துக்கு நிகராக, வாகன விபத்துகள் மற்றும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் இரண்டு போக்குவரத்துத் திட்டங்களை நடைமுறைப்படுத்த இலங்கைப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.**

அதில் முதலாவது நடவடிக்கையாக, பல்வேறு விதமான வாகன ஒலிகள், அதிக சத்தத்தில் ஒலி எழுப்புதல், ஒலி எழுப்பும் சைலன்சர்கள் பொருத்துதல், விபத்துகள் மற்றும் ஆபத்தை விளைவிக்கும் வகையில் வண்ணங்கள் கொண்ட விளக்குகளைப் பொருத்துதல் என்பன தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்படவுள்ளது.

பொதுப் போக்குவரத்து பஸ் சாரதிகள் செய்யும் போக்குவரத்து விதி மீறல்களைக் கண்டறிந்து, அந்தக் குற்றங்களுக்கான சட்டத்தை நடைமுறைப்படுத்துவது இரண்டாவது நடவடிக்கை ஆகும்.

இந்த நடவடிக்கைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை இரண்டு வாரங்களுக்கு முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## அரிசி இறக்குமதி கால அவகாசம் நீடிக்கப்படாது

கொழும்பு, ஜன.6

அரிசி இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள கால அவகாசத்தை மீண்டும் நீடிக்கப்போவதில்லை என வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அரிசி இறக்குமதிக்காக வழங்கப்பட்ட கால அவகாசம் எதிர்வரும் 10ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதிக்குப் பின்னர் அரிசி இறக்குமதிக்கான கால அவகாசம் மீண்டும் நீடிக்கப்படாது என்றும், அதை மீறி வர்த்தகர்களால் அரிசி இறக்குமதி செய்யப்பட்டால்அவைமீண்டும் திருப்பி அனுப்பப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## திரிபோஷ நிறுவனத்தை மறுசீரமைக்கும் அரசு

கொழும்பு, ஜன.6

கந்தானையில் அமைந்துள்ள திரிபோஷ நிறுவனத்தை இந்த நாட்டு மக்களின் போஷாக்குத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மறுசீரமைத்து, அதனை அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனமாகத் தொடர்ந்து நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. திரிபோஷ நிறுவனத்தின் தற்போதைய நிலைமை மற்றும் அதன் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து சுகாதார அமைச்சர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ச-இ)

## பிரதான வழக்குகள் தாமதம் ஜனாதிபதியிடம் ஆலோசனை

குற்றவியல் வழக்குகளில் விசாரணைகளை முழுமையாக முடிக்காமல் வழக்குப் பதிவுகள் மற்றும் அறிக்கைகளைப் பொலிஸார் அனுப்பும் போது கோப்புகளைத் திறக்கவோ அல்லது நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாதிருக்கவோ சட்டமா அதிபர் திணைக்களம் முடிவுசெய்துள்ளது. வழக்குத் தொடரப்படாததற்கான குற்றச்சாட்டுகளின் பின்னணியில், குறிப்பாக உயர்மட்டங்களுக்கு எதிரான முறைப்பாடுகளில், சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு குறித்து விளக்கமளிக்க சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க இன்று ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவைச் சந்திக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## புளியின் விலை திடீர் உயர்வு!

யாழ்ப்பாணம், ஜன.6

வர்த்தக நிலையங்களில் புளியின் விலை ஆயிரம் ரூபாவுக்கும் மேல் உயர்ந்துள்ளதாக சந்தை வட்டாரம் தெரிவித்துள்ளது.

அதன்படி ஒரு கிலோ புளி ஆயிரத்து 600 ரூபாவாக விற்பனைசெய்யப்படுகின்றது. இதனால் மக்கள் உணவு வகைகளுக்குப் புளி பாவிப்பதனை தவிர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-9)


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


நாளை
செவ்வாய்க்கிழமை - மார்கழி - 23
07.01.2025
சுபநேரம் : 11.02 - 12.32
ராகுகாலம் : 03.32 - 05.02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் பாலுற்பத்தியை மேம்படுத்தவேண்டும்

அகிலன் கதிர்காமர் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், ஜன. 6**

**பால்சார் உற்பத்தியில் வடக்கு மாகாணம் தன்னிறைவு காண்பதற்கு சிறந்த தரமான பால் உற்பத்தி மையங்களை கூட்டுறவுத் துறையினூடாக வடக்கில் உருவாக்கவேண்டும் என்று வடக்குக் கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.**

கால்நடை வளர்ப்பாளர்கள், விவசாய உற்பத்தியாளர்கள் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிராமியப் பொருளாதாரத்தை தனியே கால்நடை வளர்ப்புத் துறை, விவசாயத்துறை, பனை தென்னை வள அபிவிருத்தி என பிரித்துப் பார்க்கமுடியாது என்றும் எல்லாத் துறையையும் சேர்த்துத் தான் கிராமிய அபிவிருத்தியை ஏற்படுத்தமுடியும்.

வடக்கு மாகாண மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவான பால் வடக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

ஆனால் தரமான பால் உற்பத்தித் திறன் மற்றும் பெறுமதிசேர் உற்பத்தி மையங்கள் இல்லாமையினால் பெருமளவு பாலானது தென்பகுதியில் உள்ள தனியார் நிறுவனங்களால் கொள்வனவு செய்யப்படுகின்றது. வடபகுதியில் தனியார் நிறுவனங்களினால் 160 தொடக்கம் 170 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் பால் பதப்படுத்தப்பட்ட பெட்டிப்பாலாக 580 ரூபாவுக்கு நவீன அங்காடிகளில் விற்பனை செய்யப்படுகின்றது. இந்தச் செயற்பாட்டினால் நாம் பெரும் இழப்பைச் சந்திக்கின்றோம்.

எனவே, சிறந்த திட்டமிடல்களினூடாகப் பால் உற்பத்தியில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் வடமாகாணத்தின் பால் இறைமையைக் கைப்பற்ற முடியும் - என்றார். (ச-20)

# கசிப்பு விற்பனை மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 6

மாதகல், சகாயபுரம் பகுதியில் கசிப்பை வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் நேற்று இளவாலைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய தலா 750 மில்லிலீற்றர் வீதத்துடன் இருவரையும் 1500 மில்லிலீற்றர் கசிப்புடன் ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

மூவருக்கும் எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கினைத் தாக்கல் செய்து பொலிஸ் பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)




# விசுவமடுவில் திருட்டு தந்தை, மகன் கைது

முல்லைத்தீவு, ஜன.6

புதுக்குடியிருப்பு விசுவமடுப் பகுதியில் இடம்பெற்ற திருட்டுச்சம்பவத்துடன் தொடர்புடைய தந்தையும் மகனும் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் புதுக்குடியிருப்பு விசுவமடு 10ஆம் கட்டைப் பகுதியில் வீட்டுத் தளபாடங்கள், மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட 12 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளரால் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழு விசாரணை மேற்கொண்டு திருட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவரை நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளது. அத்துடன் களவாடப்பட்ட பொருள்களையும் மீட்டுள்ளது.

சந்தேகநபர்களைச் சான்றுப்பொருள்களுடன் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-22,19)



# யாழ். மருத்துவமனையில் டெங்குஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக வருகைதரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துவருவதால், டெங்குநோய்ப்பரவலைத் தடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி வாரத்தில் இரு நாள்கள் புகையூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் டெங்குநோய் பரவக்கூடிய இடங்களைக் கண்டறிந்து அவற்றைத் துப்புரவு செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் ஒரு கட்டமாக டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டுக்கான பூச்சியியல் ஆய்வு நடவடிக்கை மருத்துவமனை வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ச-25,66)

# கசிப்புக்காய்ச்சுமிடம் மாதகலில் முற்றுகை

ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.6

மாதகல்- கோணாவளைப் பகுதியில் கசிப்புக் காய்ச்சுமிடம் நேற்றுமுன்தினம் முற்றுகையிடப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளாரென இளவாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாதகல் பகுதியில் அண்மைக்காலமாக கசிப்பு விற்பனை அதிகரித்து வருவதைத் தொடர்ந்து இளவாலைப் பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போதே கோணாவளைப் பகுதியில் கசிப்புக் காய்ச்சுமிடமொன்று சுற்றிவளைக்கப்பட்டு 20 லீற்றர் கோடா, 5 லீற்றர் கசிப்பு ஆகியவற்றுடன் 37 வயதான ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

சந்தேகநபரைச் சட்டநடவடிக்கைக்குட்படுத்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-125)

சாவகச்சேரி

# மருத்துவமனைப் பணியாளருக்கு வாகன அனுமதி ஸ்டிக்கர்கள்!

யாழ்ப்பாணம் , ஜன. 6

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடமையாற்றும் அனைத்து மருத்துவர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களுக்கு விசேட வாகன அனுமதி ஸ்டிக்கர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகர் கோ.ரஜீவ் இந்தப் புதிய நடைமுறையைச் செயற்படுத்தியுள்ளார்.

அதேவேளை, சாவகச்சேரி மருத்துவமனையில் புத்தாண்டு தினமான கடந்த புதன்கிழமை முதல் பார்வையாளர் அனுமதிப்பத்திர முறைமை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-22,66)



# கொக்கிளாயில் சுற்றுலா மையம்

முல்லைத்தீவு, ஜன. 6

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் புளியமுனைக் கிராமத்தில் அமையவுள்ள சமூகம்சார் சுற்றுச்சூழல் சுற்றுலா மையத்துக்காக சுற்றுலா அமைச்சு முதற்கட்டமாக 9.6 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத் திட்டம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், சுற்றுலா அமைச்சு, வடமாகாண சுற்றுலாப் பணியகம் , கரைத்துரைப்பற்று பிரதேச செயலகம் மற்றும் பிரதேசசபை , கொக்கிளாய் மேற்கு சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் என்பவற்றின் கூட்டிணைப்புடன் செயற்படுத்தப்படவுள்ளது.

இதுதொடர்பான விசேட கலந்துரையாடல் மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் புளியமுனைக் கிராமப் பொது மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

கலந்துரையாடலில் இந்தத் திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு 'கொக்கிளாய் மேற்கு புளியமுனை சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாட்டுச் சங்கம்' எனும் சமூக அமைப்பு உருவாக்கப்பட்டதுடன் அதற்கு நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-25, 125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனை!

இந்திய விண்வெளி ஆய்வு அமைப்பான இஸ்ரோவால், விண்வெளியில் பயிரிடப்பட்ட பயறுவிதைகள் துளிர்க்க ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சிவசக்தி திருமணசேவை**


உள்நாடு, வெளிநாடுகளில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் மணமக்களின் ஜாதகங்கள் எம்மிடம் உண்டு. உங்களுக்கு பொருத்தமான வரங்களைத் தெரிவுசெய்ய எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

**077 311 6202**

# நினைவழியாத மூன்றாம் ஆண்டு

அமரர்

**கணபதிப்பிள்ளை சின்னராஜா**



தோற்றம் 05.12.1930 — மறைவு 10.12.2021

காலங்கள்
கடந்து போயிடினும்
நினைவுகள்
நிழலாய் தொடர்கின்றன

என்றும் அன்புடன்
மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

963/3, வளன்புரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

## விபத்து

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில், இந்திய கடலோர காவற்படைக்கு சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று இன்று விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர். (ம)

# மரண அறிவித்தல்



தோற்றம் 27 – 10 – 1944

மறைவு 05 – 01 – 2025

அமரர்

## இராஜசிங்கம் மணிமேகலாதேவி

நயினாதீவை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜசிங்கம் மணிமேகலாதேவி அவர்கள் 05.01.2025 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வன்னியசிங்கம் இராஜசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் (மாசிலாமணி மாஸ்டர்) கமலாட்சி அம்மா தம்பதிகளின் பாசமிகு புதல்வியும், வன்னியசிங்கம், தங்கராசம் தம்பதிகளின் மருமகளும் ஆவார். காலஞ்சென்றவர்களான மணிவாசகர், ஞானாந்தர், சோமஸ்கந்தர், ஜெயமணிதேவி மற்றும் சந்திரபாலன், பரமானந்தர் ஆகியோரின் சகோதரியும், ராஜ் ரபிந்திரநாத்தின் (Ruby Trading Lanka (Pvt) Ltd) பாசமிகு தாயாரும், மதனரூபியின் மாமியாரும், ஷனாவ், லிர்த்தின் ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்சாலையில் 06.01.2025 திங்கட்கிழமை மு.ப 9.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, ஈமைக்கிரியைகள் பி.ப 2.00 மணிக்கு ஆரம்பமாகி அதனை தொடர்ந்து தகனக் கிரியைக்காக பொரளை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
ராஜ் (மகன்)
0777237308

55/3/1, 37வது ஒழுங்கை,
வெள்ளவத்தை,
(கொழும்பு 06)

# 31ஆம் ஆண்டு நினைவலைகள்

வருடங்கள் பல சென்றாலும்
உங்கள் நினைவுகளுடன் என்றும் வணிகர்கள்



மண்ணில் 22 • 08 • 1937

விண்ணில் 06 • 01 • 1994

## அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்

முன்னாள் தலைவர், சாவகச்சேரி கைத்தொழில், வணிகர் மன்றம் முன்னாள் உரிமையாளர்,
அம்பிகா மருந்தகம், சாவகச்சேரி.

மன்ற சேவைக்கென வந்து அமரத்துவடைந்த அமரரின் நினைவு நாளும் நினைவுக்கூட்டமும் இன்று (06.01.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மன்ற அலுவலகத்தில் உள்ள அமரரின் நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டிக் கொள்கின்றோம்.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

# வவுனியா வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையின் கேள்வி அறிவித்தல் - 2025

வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபைக்கு சொந்தமான கடைகளை ஒரே கொடுப்பனவு (Key Money) அடிப்படையில் வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல. | கடை விபரம் | மாதாந்த வாடகை | கேள்விப் படிவக்கட்டணம் (ரூபா.) | மீளளிப்படும் கேள்வி வைப்பு (ரூபா.) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை, (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 01 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 01 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,440,000.00 |
| 02 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 02 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,440,000.00 |
| 03 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 03 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,440,000.00 |
| 04 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 04 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,440,000.00 |
| 05 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 05 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,440,000.00 |
| 06 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 06 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,440,000.00 |
| 07 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 07 | 6000.00 | 1000.00 | 8,000.00 | 1,440,000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் காலம் - 06.01.2025 – 20.01.2025 ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை
2. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி - 21.01.2025 ம் திகதி காலை 10.00 மணி வரை
3. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் காலம் - 21.01.2025ந் திகதி காலை 10.00 மணிக்கு
4. 21.01.2025 திகதி காலை 10.00 மணிக்குப்பின்பு கிடைக்கப்பெறும் கேள்வி விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.
5. கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்பும் விண்ணப்பதாரிகள் இலங்கைப்பிரஜையாக இருப்பதுடன் கிராம சேவையாளரின் சான்றிதழுடன் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்பிரதியுடன் நேரடியாக சமுகமளித்தல் வேண்டும்.
6. கேள்விப்படிவங்கள் இரண்டு பிரதிகளில் வழங்கப்படும். அவை இரண்டையும் ஒரே மாதிரியாக பூரணப்படுத்தி தனித்தனி தபால் உறைகளில் இட்டு தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் **கேள்வியின் பெயர், கடையின் பெயர் என்பன தெளிவாக இடப்பட்டு அரக்கு முத்திரையிட்டு செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, மன்னார் மதவாச்சி பிரதான வீதி, செட்டிகுளம், வவுனியா** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியிலோ **உரிய நேரத்திற்கு முன்பதாக** கிடைக்கக்கூடியதாக சேர்க்கப்படுதல் வேண்டும்.
7. கேள்விப்படிவத்தினைப் பெறுபவர் ஏற்கனவே பிரதேச சபையினால் தவறுநராக கணிக்கப்பட்டு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டவராகவோ அல்லது சபைக்கு எவ்வித நிலுவைக்கட்டணங்களையும் முன்னைய காலங்களில் அல்லது நடப்பு ஆண்டில் செலுத்தத் தவறியவர்களாக இருந்தால் அவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
8. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவாக கேள்வி கோருபவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
9. கேள்வி திறத்தலின்போது கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்டவர் பார்வையாளராக கலந்து கொள்ள முடியும்.
10. அதிகூடிய கேள்வித்தொகையினை சமர்ப்பித்தவருக்கே குத்தகை வழங்கப்படுவதுடன், அவர் குத்தகை எடுக்கத்தவறின் அடுத்த நிலையிலுள்ள கேள்விதாரரின் கேள்வித்தொகை திருப்தியாக அமைந்தால் பரிசீலிக்கப்படலாம்.
11. சித்தியெய்தும் கேள்விதாரர் தங்களது கேள்வித்தொகையினை எம்மால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். தவறின் அவரது கேள்வி இரத்துச்செய்யப்படுவதுடன் கேள்வி வைப்பும் மீளளிக்கப்படமாட்டாது.
12. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையின் செயலாளர்க்கு பூரண அதிகாரம் உண்டு.
13. குத்தகை எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும்.
14. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு : கேள்விச்சபையின் தீர்ப்பே இறுதியானது.**

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**வெங்கலச்செட்டிகுளம்.**

(எ.44022) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புடவைக் கைத்தொழில் திணைக்களம்
## 2025/2026 கல்வியாண்டுக்காகநெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளல்

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் இயங்கும் நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களில் 2025 பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள பின்வரும் பயிற்சிப் பாடநெறிகளுக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இப் பாடநெறிகள் கட்டணம் அறவிடப்படாமல் முற்றிலும் இலவசமாக நடத்தப்படும்.

**01. நடத்தப்படும் பாடநெறியின் பெயர் மற்றும் காலம்**

I. கைத்தறி புடவைக் கைத்தொழிலில் அடிப்படை பயிற்சிப் பாடநெறி - 06 மாதங்கள்

இது 06 மாதகால முழு நேர பாடநெறி என்பதோடு கைத்தறி புடவைக் கைத்தொழிலில் ஈடுபடுவதற்குத் தேவையான அடிப்படை அறிவு இந்த பாடநெறி மூலம் வழங்கப்படுகிறது.

II. கைத்தறி புடவைக் கைத்தொழிலில் இறுதிச் சான்றிதழ் பாடநெறி - 12 மாதங்கள்

இது 12 மாதகால முழுநேர பாடநெறி என்பதோடு அதன் முடிவில் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு புடவைக் கைத்தொழிலில் இறுதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

**02. ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்**

I. அடிப்படை பயிற்சிப் பாடநெறி
- அரசாங்கப் பாடசாலையொன்றில் 8ம் வகுப்பு சித்தியடைந்திருக்க வேண்டும்.
- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியில் 16 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்

II. இறுதிச் சான்றிதழ் பாடநெறி
- சிங்களம் / தமிழ் மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களுடன் க.பொ.த.(சா/தர) பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
- 18 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**பாடநெறியின் நன்மைகள்**

1. பாடநெறியின் முடிவில் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையின் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் இணைவதற்கான வாய்ப்புக்கிடைப்பதோடு அதனூடாக கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையின் வணிக வாய்ப்புகளில் இணைவதற்கான பின்னணியை உருவாக்கிக் கொள்ளவும் முடிகின்றமை.
2. கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையில் சுயதொழில் செய்பவராக பணியாற்றுவதற்கான இயலுமை.
3. நெசவு ஆலோசகர் பதவியில் நியமனம் பெறுவதற்கான வாய்ப்பு (உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பதோடு போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.)

I. பாடநெறியைப் பயிலும் காலப்பகுதியில் 100.00ரூபா நாளாந்த கொடுப்பனவும் நிறுவனத்திற்கான சீருடையும் வழங்கப்படும்

II. விடுதிகளுடன்கூடிய பயிற்சி நிறுவனங்களில் சேரும் மாணவர்களுக்கு இலவசமாக தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.(உணவுக்கான செலவுகள் தவிர்த்து)

03. பின்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து அத்துடன் விண்ணப்பதாரரால் சான்றளிக்கப்பட்ட அவரது பிறப்புச் சான்றிதழ். பாடசாலை விடுகைப்பத்திரம். க.பொ.த. (சா / தர) மற்றும் க.பொ.த. (உயர்தர) - (இருப்பின்) ஆகிய சான்றிதழ்களின் நிழற்பட பிரதிகளை இணைத்து 2025.01.31 ஆம் திகதிக்கு முன்னர் கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும்.

| தொ. இல. | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் முகவரிகள் | மாவட்டம் | வதிவிட வசதிகள் | மொழி மூலம் |
|---|---|---|---|---|
| 1 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் 280/1, காலி வீதி, கட்டுபெத்த, மொறட்டுவ. | கொழும்பு | உள்ளன | சிங்களம் |
| 2 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் ஹக்மன வீதி, மாத்தறை. | மாத்தறை | உள்ளன | சிங்களம் |
| 3 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கிரம, வலஸ்முல்ல. | ஹம்பாந்தோட்டை | உள்ளன | சிங்களம் |
| 4 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் அருப்பல வீதி, வட்டபுழுவ, கண்டி | கண்டி | உள்ளன | சிங்களம் |
| 5 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கெட்டம்பே, பேராதனை | கண்டி | உள்ளன | சிங்களம் |
| 6 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கிணிகம, பண்டாரவளை. | பதுளை | உள்ளன | சிங்களம் |
| 7 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கோங்கஹமுல, பலாபத்வல, மாத்தளை. | மாத்தளை | உள்ளன | சிங்களம் |
| 8 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் மல்பிட்டிய, போயகனே, குருநாகல். | குருநாகல் | உள்ளன | சிங்களம் |
| 9 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கொட்டல, வேயாங்கொடை. | கம்பஹா | உள்ளன | சிங்களம் |
| 10 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் மிஹிரிகம, தலாவ. | அனுராதபுரம் | உள்ளன | சிங்களம் |
| 11 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் பின்னவல, ரம்புக்கன. | கேகாலை | இல்லை | சிங்களம் |
| 12 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கலேகான வீதி, கிங்தொட்ட, காலி | காலி | இல்லை | சிங்களம் |
| 13 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் பண்ட் வீதி, சம்மாந்துறை | அம்பாறை | உள்ளன | சிங்களம் தமிழ் |
| 14 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் 194, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | உள்ளன | தமிழ் |

பணிப்பாளர்,
புடவைக் கைத்தொழில் திணைக்களம்
3 ஆம் மாடி, செயலகக் கட்டிடம், மாலிகாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. : 0112-322895, 0112-322897
மின்னஞ்சல் - dtidev2000@gmail.com

**மாதிரி விண்ணப்பப்படிவம்**
**2025/2026 கல்வியாண்டுக்காக**
**நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளல்**

1. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :

2. முழுப் பெயர் (ஆங்கிலத்தில்):

3. தனிப்பட்ட முகவரி : ....................
4. தொலைபேசி இலக்கம் : ....................
5. வதியும் மாவட்டம் : ....................
6. பிறந்த திகதி : ....................
7. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ....................
8. பால் : ....................
9. திருமண அந்தஸ்து : ....................
10. கல்வித் தகைமைகள் : ....................
11. சேர்வதற்கு எதிர்பார்க்கும் நிறுவனம் : ....................
12. பயில்வதற்கு எதிர்பார்க்கும் பாடநெறி :

| | |
|---|---|
| அடிப்படை பாடநெறி (06 மாதங்கள்) | |
| இறுதிச் சான்றிதழ் பாடநெறி (01 வருடம்) | |

12. வதிவிட வசதிகளுக்கான தேவை : தேவை / தேவையில்லை

மேலே உள்ள தகவல்கள் சரியானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ....................

....................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

## மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்

ஆசிரியர் திருமதி
**கலாமதி குலேந்திரன்**
**(SLTS - 1, பயிற்றப்பட்ட விஞ்ஞானம்)**



Congratulations

**சேவைக்காலம்**
- தேசிய இளைஞர் சேவை மன்றம் - 01.09.1987 - 11.02.1991
- யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் - 12.02.1991 - 31.12.1991
- பலாலி ஆசிரியர் கலாசாலை - 01.01.1992 - 31.12.1993
- யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி - 01.01.1994 - 15.06.2010
- யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் - 16.06.2010 - 31.10.2013
- யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் - 01.11.2013 - 18.05.2021
- யா/ நீர்வேலி சி.சி.தமிழ் கலவன் பாடசாலை - 19.05.2021 - 05.01.2025

எமது பாடசாலையில் அளப்பெரும் சேவையாற்றி இன்று (06.01.2025) திங்கட்கிழமை ஓய்வுபெறும் **திருமதி கலாமதி குலேந்திரன்** அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்: ஆசிரியர்கழகம்**
**யா/ நீர்வேலி சி.சி.தமிழ் கலவன் பாடசாலை**

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை - காங்கேசன்துறை உபஅலுவலகம்
உரிமையாளர் பெயர் - அருள்முருகன் சபேசனும் பெண் ஜமுனா சபேசனும்
விண்ணப்பதாரர் பெயர் - அருள்முருகன் சபேசன்
முகவரி - பிரதான வீதி காங்கேசன்துறை

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் காங்கேசன்துறை உபஅலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 03. காங்கேசன்துறை வீதி ஆதன இல 1254/8 இல் அமைந்துள்ள தெல்லிப்பளை கோவிற்பற்று மாவிட்டபுரம் இறை "நிரலையிட்டி" என்ற ஆதனம் சொந்தக்காரர் உரிமை கோருபவர் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது. குறித்த ஆதனமானது 24.03.2021ஆந் திகதிய சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸ் செ.சோபிதன் அவர்கள் முகதாவில் இலக்கம் 786 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதியின் தாய் உறுதியான சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸ் ஏ.சேமசுந்தரம் அவர்களால் 19.10.1938ஆம் திகதிய 137 ஆம் இலக்க சீதன உறுதியால் முருகேசு சிதம்பரநாதர் பெண் பத்மாவதியை வந்தடைந்துள்ளது. பின் முருகேசு சிதம்பரநாதர் பெண் பதமாவதி ஆகிய இருவரும் இறக்க அவரது பிள்ளைகளான சிதம்பரநாதர் சபேசன். சிதம்பரநாதர் சந்திரசேகர் ஆகியோரால் 24.03.2021 ஆம் திகதிய 786 ஆம் இலக்க நன்கொடை உறுதிமூலம் அருள்முருகன் சபேசனும் பெண் ஜமுனா சபேசனும் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**ஆதனவிபரம்:**

வடமாகாணம் யாழப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று மாவிட்டபுரம் இறை உள்ளூராட்சி சபை வலிகாமம் வடக்கு பிரதேசசபை பிரதேசசெயலாளர் பிரிவு வலிகாம் வடக்கு. கிராம அலுவலர் பிரிவு J/233"நிரலையிட்டி" நில.பர 6 1/2 ஆனால் இது 2020ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ம் திகதி உத்தரவு பெற்ற மூன்றும் (3) கிணறும் தூர்வையும் வான்செய்பயிர்களும் இந்த நிலபர மூன்றுக்கும் எல்லை

**கிழக்கு** - சுப்பர் வைரமுத்துவின் ஆதனம்
**வடக்கு** - கார்த்திகேயன் திவாணியின் ஆதனம்
**மேற்கு** - கை ஒழுங்கை
**தெற்கு** - இராசேந்திரசீலன் பெண் சாந்தகுமாரியின் ஆதனம் இதனடங்கலும் குறித்த கிணற்றிலும் தூர்வையிலும் பிறபங்குகள் புறநீங்கலாக

மேற்குறித்த ஆதனத்தை உதயகுமார் விஷ்ணுபிரியன் பெயரில் ஆதனப்பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து. 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருப்பின் இங்குள்ள உறவினர்க் கூடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனையை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் உதயகுமார் விஷ்ணுபிரியன் பெயரிற்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சுந்தரேஸ்வரன் சுதர்சன்**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)**

(cs 57198) (N.1)

## மாணவிக்கு ஆபாச காணொலி சிப்பாய் கைது

கொழும்பு, ஜன.6

13 வயதுடைய பாடசாலை மாணவியை அச்சுறுத்தி தனது கையடக்கத் தொலைபேசியில் ஆபாசமான குறுஞ் செய்திகள் மற்றும் காணொலிகளை அனுப்பிய சிப்பாய் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என சிறிபுரப் பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## கிளிநொச்சியில் கஞ்சாவுடன் சிப்பாய் கைது

கிளிநொச்சி, ஜன.6

கிளிநொச்சிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உமையாள்புரம் பகுதியில் சிப்பாயொருவர் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக குறித்த சிப்பாயைச் சோதனையிட்டபோதே அவரிடமிருந்து ஒரு கிலோ 500 கிராம் எடையுடைய கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேகநபர் சான்றுப்பொருளுடன் மேலதிக விசாரணைக்காக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைக்காலப் பாதிப்பில்லாமல் சம்பளம் இல்லாத விடுமுறை!

அரசாங்க ஊழியர்களின் சேவைக் காலம் மற்றும் ஓய்வூதியத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் பணிகளில் ஈடுபடுவதற்காக சம்பளம் அற்ற விடுமுறையை பெற்றுக் கொள்வது தொடர்பில் பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் விசேட அறிவித்தலொன்றை விடுத்துள்ளது.

இந்த விடுமுறையை அங்கீகரிப்பதில் மாவட்டச் செயலாளர்கள் பின்பற்ற வேண்டிய விடயங்கள் தொடர்பில் இந்த அறிவிப்பில் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

அரசாங்க உத்தியோகத்தர்கள் சிலர் 5 வருடங்களுக்கு உள்நாட்டில் விடுமுறையைப் பெற்றுக் கொண்டு விடுமுறையை இரத்துச் செய்யாமல் வெளிநாட்டு விடுமுறைக்கு விண்ணப்பித்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன. ஆதலால், விடுமுறையை அங்கீகரிக்கும் முன்னர் அது தொடர்பில் பரிசீலிக்குமாறு பொது நிர்வாக அமைச்சு மாவட்டச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (ம-இ)

## பொதுக்கூட்டமும், நிர்வாகசபைத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஜன.6

மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும் சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வில் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-45-131)

## விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 6


யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவனில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளை ஏற்றிவந்த பேருந்தும், மோட்டார்சைக்கிளும் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சமிக்ஞை விளக்கைக் கவனிக்காமல் பேருந்து பயணித்தமையே விபத்துக்குக் காரணம் என்று சம்பவ இடத்தில் நின்ற பொதுமக்கள் தெரிவித்தனர். (ம-125)


## மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 04 . 1940



மறைவு
05 . 01 . 2025

கதிரேசு நவரத்தினம் (மணியக்கா)

நயினாதீவு ஐந்தாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சிவன் கோவிலடி, ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும், இல 28, பழைய தபாற்கந்தோர் வீதி, கொக்குவில் கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு நவரத்தினம் (மணியக்கா) அவர்கள் நேற்று (05.01.2025) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-வள்ளியம்மை தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற விநாசித்தம்பி-சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கதிரேசு அவர்களின் மனைவியாரும் காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, பாலயோகினி மற்றும் இராசரத்தினம் ஆகியோரின் சகோதரியும் பிறேமாவதி, புஸ்பலீலாவதி, லோமாவதி, ரேவதி, பிரபாவதி, தனவதி, உமாதேவி, சாந்தகுமார், சிவகுமார், ராஜ்குமார், ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்றவர்களான ஜெகநாதன், குருநாதன், மணிவேலழகன் மற்றும் யோகராசா, நமசிவாயம், நகுலேஸ்வரன், தங்கராசா, ஜெயசுதா, சுகந்தி, துஷியந்தி ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற நாகவிபூசன் மற்றும் பார்த்தீபன், பிரதீபன், ராஜினி, கஜதீபன், மகிழரசி, நிஷாந்தினி, பத்மவிதுசன், மதுரா, லாகுஷன், லக்ஷகா, பாதுஷன், நிதுர்ஷா, கோயிகன், சாருஜன், லயசுயன், லோகிதா, கபிதா, வருணிதா, நுபானா, நீருசன், பதுமிதன், பர்வின், டிதுசா, சிரோன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2025) திங்கட்கிழமை கொக்குவில் கிழக்கிலுள்ள இல்லத்தில் 12.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று 02.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 284 1381
077 593 0545

(CS 2208) V-1

தகவல்:
குடும்பத்தினர்.



சிவமயம்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.12.2024 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் கிருஷ்ணபிள்ளை கஜிந்தவநாதன்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் (08.01.2025) புதன்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு எதிர்வரும் (10.01.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இராஜவீதி தோப்பு,
அச்சுவேலி.

இங்ஙனம்
குடும்பத்தினர்



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
08 . 09 . 2009



இறைவன் அடியில்
07 . 12 . 2024

**அமரர் பிரபாகலேந்திரன் சஜீனா**

மாதம் ஒன்றினைக் கடந்த எம் செல்வமே
எம்மை நாமே ஆற்றுப்படுத்த முடியாமல்
புலம்பித் தவிக்கின்றோம் உன் நினைவில்
ஆறாத துயரத்தை எமக்களித்துவிட்டு
ஆகுதியாகி நீ சென்றுவிட்டாயே சஜீனா!

எமது குடும்பத்திற்கு ஒளிவிளக்காய் வந்துதித்த
தெய்வ மகளே சஜீனா!
விந்தைகள் பல புரிந்து எம்மை வியக்கவைத்து - நீ
விண்ணுலகம் சென்றதேனோ?

உன்முகம் பாராமல் உன்மொழி கேளாமல்
உள்ளக் குமுறலை அடக்க முடியவில்லையே
மாதமொன்று கடந்தாலும் எமது இப் பிறப்புள்ளவரை
கண்ணீர்த் துளிகளின் மணிகளினால் உன்னை அர்ச்சித்து
உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

உனது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுண்ணக்கல் லொறி

# அறிக்கை கிடைத்ததும் அடுத்தகட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 6

சாவகச்சேரியில் சுண்ணக்கல்லுடன் கைப்பற்றப்பட்ட லொறி தொடர்பில் கனியவளத் திணைக்களத்தின் அறிக்கை பெறப்பட்ட பின்னர் விரைவில் அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுண்ணக்கல் அகழ்வு என்பது பொலிஸாருக்கு பொறுப்பான விடயம் அல்ல. இது தொடர்பில் கனியவளத் திணைக்களமே நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். சில நாள்களுக்கு முன்னர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் சுண்ணக்கற்களுடன் லொறி ஒன்று (நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனால் மடக்கிப்பிடிக்கப்பட்ட லொறி) ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அது தொடர்பில் கனியவளத் திணைக்களத்திடம் சில ஆவணங்களைக் கோரியுள்ளோம். அந்த அறிக்கைகள் கிடைத்ததும் அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனால் மடக்கிப் பிடிக்கப்பட்ட லொறியின் உரிமையாளர், தாம் சட்டவிரோத வர்த்தகத்தில் ஈடுபடவில்லை என்று தெரிவித்திருந்தார். இதையடுத்து, மாதிரிகள் பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

கடந்த வருடத்தில்

## வீதி விபத்துகளில் 77 பேர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த வருடம் வீதி விபத்துக்களால் 77 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன. அத்துடன், 189 பேருக்குக் கடும் காயங்களும், 93 பேருக்கு சிறு காயங்களும் ஏற்பட்டுள்ளன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-26)

## 4 நாள்களில்...

கடந்த 4 நாள்களில் 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 18 பேர் கடந்த நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## கடந்த...

526 முறைப்பாடுகளும், பாலியல் துன்புறுத்தல் அல்லது தொந்தரவு தொடர்பில் 544 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்றும் இலங்கை பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. அதிகபட்சமாக மேல்மாகாணத்தில் 489 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டியில் 14 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- 2 பரப்பாகவும் 3பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- உடுப்பிட்டி சன்னதி கோயில் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- நல்ல சூழல், நன்னீறூற்று, நிலப்பரப்பு
- பொக்கன் சந்திக்கு அருகாமையில் உடுப்பிட்டி வாசிகசாலை சந்தி 300 மீட்டர் தூரம்
- சன்னதி முருகன் கோயில் 2 கிலோமீற்றர் கெருடாவில் கந்தசாமி கோயில் 200 மீற்றர் தூரம்.
- வழி இலக்கம் 751 மற்றும் 767 அரச, தனியார் பேரூந்து செல்லும் பிரதான காபற் வீதி
- பார்வை நேரம் காலை 8 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

தொடர்பு: 070 290 2338
076 017 1105

நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் - வடக்கு மாகாணம்

## பெறுகைகளுக்கான அழைப்பு

உணவு மூலப் பொருட்கள் மற்றும் தொற்று நீக்கிப் பொருட்களுக்கான பெறுகை

2025 முதலாம் அரையாண்டு

தலைவர். வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவினால் வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள பின்வரும் அலுவலகங்களுக்கு உணவு மூலப் பொருட்கள் மற்றும் தொற்றுநீக்கிப் பொருட்களை 2025 ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டிற்கு வழங்குவதற்குத் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| Details | | Safe House Kilinochchi | State Receiving Home Kaithady | Certified School Atchuvely |
|---|---|---|---|---|
| Reference No. | | NP/30/02/04/Raw food/SH-Kili/2025 1st Half Year | NP/30/02/04/Raw food /SRH-Kai/ 2025 1st Half Year | NP/30/02/04/Raw food/CS-Achu/ 2025 1st Half Year |
| Non Refundable Fee | | Rs. 3500/- | Rs. 3500/- | Rs. 3500/- |
| S.N | Type of Food | Amount of Bid Security (Rs) | | |
| 1 | Fresh Vegetables and | 20,000 | 10,000 | 20,000 |
| 2 | Meat, Eggs and Sea Foods | 14,000 | 8,000 | 14,000 |
| 3 | Dry Foods Packets, Tins | 20,000 | 10,000 | 20,000 |
| 4 | Bakery Products | 1,000 | ............... | 1,000 |
| 5 | Consumable Items | 20,000 | 10,000 | 20,000 |
| If quoted all category | | **75,000** | **38,000** | **75,000** |

1. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.
2. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெற்றிருக்கலாகாது.
   - கேள்விதாரர் குறித்த பெறுகைக்கு பொருத்தமான வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த ஒருவருடத்திற்குள் இதையொத்த இயல்புடைய மற்றும் அளவுகளில் வழங்கல் மேற்கொண்ட அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
   - மேலதிக தகவல்கள் பெறுகை ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளது.
3. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்கள் பகுதி 2 - கேள்வித் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் , மீனாட்சிஅமமன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை ஆணையாளர் அலுவலகத்தில் பரிசீலிக்க முடியும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சிஅம்மன் வீதி, பண்ணை,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வேலை நாட்களில் 06.01.2025 ஆம் திகதி தொடக்கம் 20.01.2025 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் மேற்குறிப்பிடப்பட்ட தொகையினை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணங்கள் 21.01.2025 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு முன்பதாக ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் , மீனாட்சிஅம்மன் வீதி, பண்ணை,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. சகல கேள்விகளுடனும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டதற்கிணங்க பொருத்தமான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும். கேள்விப்பிணை சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். முன் ஆயத்த பெறுகைக் கூட்டம் 16.01.2025 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் , மீனாட்சிஅம்மன் வீதி, பண்ணை,யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் நடைபெறும்.
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

திருமதி.சுஜீவா சிவதாஸ்
தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,
வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் - வ.மா
மீனாட்சி அம்மன் வீதி,
பண்ணை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021-205-7102 தொலைநகல் 021-205-7103

(CR/44038) J-1

## தேவை

ஆரம்பிக்கப்படவுள்ள உப உணவு (Herbal), உற்பத்தி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற இலங்கை மருத்துவ சபையில் பதிவிலக்கம் உடைய (Srilanka Medical Council) அல்லது ஓய்வு பெற்ற சித்த ஆயுர்வேத மருத்துவர் தேவை.

தொடர்பு: 077 805 2520

## வீடு விற்பனைக்கு உண்டு

பருத்தித்துறை வீதி, இருபாலை (Express Tutory க்கு அருகில்) 2 1/2 பரப்பு உடன் கூடிய 4 அறைகள், 5 பாத்ரூம், கராஜ் உடன் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
076 337 0335

## மரண அறிவித்தல்



திருமதி தேவராசா ரத்தினவதி

மண்ணில் 12.07.1947 — விண்ணில் 04.01.2025

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவராசா ரத்தினவதி அவர்கள் நேற்று முன்தினம் (04.01.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2025) திங்கட்கிழமை பி.ப. 12.30 மணியளவில் 7/3, புனித அன்னம்மாள் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 3.00 மணியளவில் துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: தே.கைலைநாதன் (மகன்)
076 584 0297

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்நாட்டுப்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது அமர்வு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த அமர்வுக்கு முன்பாக மேற்படி சிறப்பு அறிக்கையை வெளியிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த அறிக்கையை உருவாக்குவதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தின் தலைமையில் சிறப்புக் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களை முற்றாக நிராகரிக்கும் வகையிலும், இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக வெளிப்புற சாட்சியங்களைத் திரட்டுவதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையிலும் இந்த சிறப்பு அறிக்கை அமையும். அதேநேரம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குப் பதில் வழங்கும் வகையில் அந்த அறிக்கை அமையாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை, ஜனாதிபதி அநுர தலைமையிலான அமைச்சரவை கடந்த ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி நிராகரித்திருந்தது. இதன் தொடர்ச்சியாகவே, உள்நாட்டுப் பொறிமுறைமூலம் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை வெளிப்படுத்தும் விதமாக இந்த அறிக்கை வெளியிடப்படவுள்ளது. (அ-ம-இ)

## குப்பைகளை...

ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர், தூய இலங்கைத் திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு முன்பாகவுள்ள குப்பைகளை அகற்றாவிடில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று சமூக வலைத்தளங்களில் செய்திகள் பரவி வந்தன. இதையடுத்தே, அந்தத் தகவல்களில் உண்மையில்லை என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இவ்வாறான போலித் தகவல்களைப் பரப்பியவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம-6)

## நோயாளிகளை...

உழவியந்திரத்தின் மீது மோதியே முழங்காவில் மருத்துவமனைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் விபத்துக்குள்ளானது. தொடர்ந்து பயணிக்க முடியாத அளவுக்கு அம்புலன்ஸ் சேதமடைந்ததால் கிளிநொச்சி மருத்துவமனையில் இருந்து பிறிதொரு அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு நோயாளர்கள் அழைத்துச்செல்லப்பட்டனர்.

தெய்வாதீனமாக நோயாளர்கள் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-27)

## முன்னாள்...

இலங்கைக்கான தென்கொரியத் தூதுவர் நியோன் லீ மற்றும் இலங்கைக்கான அவுஸ்திரேலியத்தூதுவர் போல்ஸ்ஸ்ரீபன் ஆகியோரே முன்னைய அரசாங்கத்தில் இருந்த அமைச்சர்கள் தம்மிடம் லஞ்சம் கோரினார்கள் என்று முறையிட்டுள்ளனர். முத்துராஜவனம் தொடக்கம் கட்டுநாயக்க விமான நிலையம் வரையிலான எரிபொருள் குளாய்களைப் பொருத்துவதற்காக தம்மிடம் லஞ்சம் கோரப்பட்டதாக தென்கொரியத் தூதுவர் நியோன் லீ தெரிவித்துள்ளார். முறைப்படி அனுமதியைப் பெற்று தமது திட்டங்களை முன்னெடுத்த போதிலும், இலங்கையின் அமைச்சர்கள் தமது திட்டங்களை நிறைவேற்ற இழுத்தடித்தனர். இறுதி அனுமதியை வழங்குவதற்குப் பின்னடித்தனர் என்றும் தென்கொரியத் தூதுவர் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளார். (அ-ம-இ)

## மஹிந்தவின்...

ஆறு பொலிஸாரே போதும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மஹிந்தவுக்கு வழங்கப்பட்டுவந்த பாதுகாப்பை ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் மிகையாகக் குறைத்துள்ளது. இதற்கு மஹிந்தவின் பொதுஜன பெரமுனவினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, மஹிந்தவின் பாதுகாப்புக்கு தற்போதுள்ள பொலிஸ் படையணியே தேவையில்லை என்றும், ஆறு பொலிஸார் போதும் என்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக அழித்துவிட்டதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவரது பதவிக்காலத்தில் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். அவ்வாறான நிலையில், புலிகளால் அவரது உயிருக்கு ஆபத்து இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆனால் மஹிந்தவுக்கு அவரது மெதமுலன நண்பர்கள், உறவினர்களிடமிருந்து பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கின்றதா என்பது குறித்துத் தெரியவில்லை. எதுவாக இருந்தாலும் தற்போதைய நிலையில் மஹிந்த ராஜபக்ஸவின் பாதுகாப்புக்கு நன்கு பயிற்றப்பட்ட ஆறு பொலிஸாரே போதும் - என்றார். (அ-ம-இ)

## உக்ரைன்...

செல்லப்பட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ரஷ்யா உக்ரைன் எல்லைக்குக் கடத்திச் செல்லப்பட்டு வலுக்கட்டாயப்படுத்தி போரில் ஈடுபடுத்தப்பட்ட இளைஞர்களின் குடும்பங்கள், தமது பிள்ளைகளை மீட்டுத் தருமாறுகோரி ஜனாதிபதியின் அலுவலகத்துக்கு முன்பாக இன்று பேரணி நடத்தவுள்ளனர். அதைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு மனுவும் கையளிக்கவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வலுக்கட்டாயமாக கடத்திச் செல்லப்பட்டு ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்ட இளைஞர்கள் தொடர்பான தகவல்கள் இதற்கு முன்னர் வெளியாகியிருந்தன. எனினும், அந்தத் தகவல்களை ரஷ்யா மறுத்திருந்தது. இலங்கையர்கள் எவரும் ரஷ்ய இராணுவத்தில் இல்லை என்றும் ரஷ்யா கூறியிருந்தது. இவ்வாறான நிலையில் தற்போது 500 பேர் உக்ரைன் ரஷ்யப் போர்க் களத்துக்குக் கடத்தப்பட்டுள்ளனர் என்ற தகவல் பெரும் பரபரப்பான விடயமாக மாறியுள்ளது.

போர்க்களத்துக்குக் கடத்தப்பட்ட இளைஞர்களுக்கு உக்ரைன், ரஷ்ய குடியுரிமை வழங்கப்பட்டதால், அவர்களை மீட்பது சிரமமாக உள்ளதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## அரசியலமைப்பு...

ணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் தெரிவித்துள்ளார்.

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25ஆவது ஆண்டு நினைவேந்தலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் ரகுராம் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைத்திருக்கின்றது. இவ்வாறான சூழலில் நாங்கள் தீர்வை நோக்கி நகர வேண்டுமாக இருந்தால் கொழும்பில் இருந்து முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் கவனத்துடன் இருக்க வேண்டும். எங்களுடைய கோரிக்கைகள் மற்றும் அபிலாஷைகளை தனித்து முன்னெடுப்பதைக் காட்டிலும் கொழும்பிலிருந்து சில அறிகுறிகளை எதிர்பார்க்க வேண்டிய இடத்திலிருக்க வேண்டும்.

கடந்த காலத்தில் ஆட்சியமைத்தவர்கள் விட்டுச்சென்ற பாதையில் இருந்து வேறுபட்ட பாதையில் நகர வேண்டிய நிலைக்குள் தேசிய மக்கள் சக்தி தற்போது தள்ளப்பட்டுள்ளது. தனியே தமிழ் மக்கள் மத்தியில் மாத்திரமல்லாது தெற்கிலிருந்தும் மிகப்பெரிய எதிர்பார்ப்பு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீது இருக்கிறது. இந்த எதிர்பார்ப்புதான் பெரிய அச்சமாக இன்று உருவாகி வருகின்றது.

ஒரு எதிர்பார்ப்பு உச்சளவில் இருக்கின்ற போது அதை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி காத்திரமான முன்னகர்வை எடுத்துவருவதாக இதுவரை உறுதிப்படுத்தப்படக்கூடிய தடயங்கள் எங்களுக்கு கிடைக்கப்பெறவில்லை. ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளை எவ்வாறு கையாளப்போகின்றது என்பதை தேசிய மக்கள் சக்தி வெளிப்படுத்த வேண்டும். ஆனால், இதுவரைக்கும் அவ்வாறு எந்த முயற்சிகளும் இடம்பெற்றதாக எங்களுடைய கண்களுக்கும் அறிவுப் புலத்துக்கும் கிடைக்கவில்லை.

தமிழர்களின் முக்கியமான பிரச்சினைகளாக உள்ள, காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, காணி விடுவிப்பு, பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம், அரசியல் கைதிகளின் விடுதலை, அரசியல் உரிமைகளுக்கான அங்கிகாரம் என்பன நிறைவேற்றப்பட வேண்டும். வடக்கு - கிழக்கு இணைப்பு அவசியமாக உள்ளபோது அதற்கான இணைப்பு அதிகாரசபை தொடர்பான யோசனை முன்வைக்கப்பட வேண்டும்

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும், இராணுவ மயமாக்கம் தவிர்க்கப்பட வேண்டும், இராணுவக் குறைப்புகள் நடைமுறைக்கு வரவேண்டும் இவற்றின் ஊடாக ஒரு நம்பிக்கையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உருவாக்க வேண்டும்.

ஈழத்தமிழரின் அடிப்படை கோட்பாடுகள் தொடர்பில் பேசுவதற்கும், அவற்றைப் பற்றி உரையாடுவதற்கும் அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகள் தொடர்பில் செல்வதற்கும் சர்வதேச மத்தியஸ்தத்தின் ஊடாக நாங்கள் நகர வேண்டும். சர்வதேச மத்தியஸ்தம் இல்லாத சந்தர்ப்பத்தில் மீண்டும் எங்களுடைய நேரத்தை நாங்கள் வீணடிக்கக் கூடாது. தரக்கூடிய தீர்வுப்பொதிகளை மட்டும் வைத்துக் கொண்டு பேசக்கூடியவர்களாக நாங்கள் இருக்கக் கூடாது. அப்படியென்றால், வெவ்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் எங்களுடைய தீர்வுகளை நோக்கி பயணிக்க வேண்டியவர்களாக நாங்கள் தள்ளப்படுவோம். இதில் புலத்தில் இருப்பவர்களின் நிலைப்பாடும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் - என்றார். (அ-ம-125)

## காசோலை...

காசோலை மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மென்பான நிறுவனமொன்றுக்கு அவர் 2 லட்சம் ரூபா காசோலையை எழுதிக் கொடுத்துள்ளார். எனினும், அதற்கும் குறைவான தொகையே அவருடைய வங்கிக் கணக்கில் இருந்துள்ளது. இதையடுத்து வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே அந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருடைய உறவினர்களால் அந்தத் தொகை வங்கிக்குச் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (அ-ம-125)

## 2024ஆம்...

2024ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 185 பேர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் பதிவான உயிர் மாய்ப்புக்களின் சராசரி தேசியத் தரவுகளையும் விட அதிகமாக உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன்படி ஒரு லட்சம் பேரில் 15 பேர் உயிர் மாய்க்கின்றனர் என்பதே தேசியத் தரவாக உள்ள நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அது இரட்டிப்பு எண்ணிக்கையாக உள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## சட்டம்...

நகரப் பகுதியில் புத்தாண்டுக்கு முன்னிரவு இளைஞர் ஒருவர் மீது நடத்தப்பட்ட கொலைவெறித் தாக்குதல் மற்றும் மதுபானசாலை ஒன்றுக்குள் புகுந்து மேற்கொள்ளப்பட்ட அடாவடிகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வாரத்தில் யாழ். நகரில் நடைபெற்ற வன்முறைச் சம்பவம் பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் நான்கு சந்தேகநபர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளோம். புலனாய்வு விசாரணைகள் தொடர்ந்து வருகின்றன. ஏனைய சந்தேகநபர்களைக் கைதுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, இதற்குரிய அறிவுறுத்தல்கள் தொடர்புடைய பொலிஸ் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பாரதூரமான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களைக் கைதுசெய்து குற்றவியல் சட்டக்கோவையின் கடுமையான சட்டங்களின் கீழ் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம் - என்றார். (அ-ம-26)


## 41 பேருக்கு...

மாவட்டத்தில் கடந்த சிறுபோகத்தின் போதும், பெரும்போகத்தின்போதும் எலிக்காய்ச்சல் தொற்று குறிப்பிடத்தக்க அளவில் ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள் அனைவரும் குணமடைந்துள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-110-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி சபிண்டிகரண ஆத்மசாந்தி பிரார்த்தனை அழைப்பு

பிறப்பு 26.05.1936



இறப்பு 08.12.2024

கடந்த 08.12.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் திரு. செல்லப்பா செல்வராசா

(ஓய்வு நிலை அதிபர், மத்தியஸ்தர் சபை உறுப்பினர், சமாதான நீதவான், கட்டைவேலி ப.நோ.கூ.சங்க தலைவர், பணிப்பாளர் கணபதி அறக்கட்டளை நிறுவனம்)


மாதம் ஒன்று சென்றாலும்
கண்ணீர் சொரிந்த கண்களுக்கு
இன்று வரை ஓய்வில்லை
காணும் இட மெல்லாம் உங்கள் நினைவு!
கதறுகிற உறவுகளுக்கு
ஆறுதல் தான் ஏது.. தந்தையே ..?
தரிசனம் காண வரிசையாய் நிற்கின்றோம்
தாங்கிப் பிடித்த வழிகாட்டியை
தேடித் தேடித் அலைகின்றோம்
மாதம் ஒன்றல்ல
இரண்டல்ல பல்லாண்டு போனாலும்
உங்கள் அன்பும் பாசமும்
என்றும் எம் நினைவை விட்டு அகலாது

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (07.01.2025) செவ்வாய்க்கிழமை அதிகாலை 04.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தியானது கீரிமலை புனித தீர்த்த கரையில் கரைக்கப்படும். மதியம் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் சபிண்டிகரண கிரியைகள் நடைபெறும். 08.01.2025 புதன்கிழமை மாலைசந்தை விநாயகர் திருமண மண்டபத்தில் மதியம் 11.30 மணியளவில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

புதுத்தோட்டம்,
அல்வாய் தெற்கு, அல்வாய்.

தகவல்: குடும்பத்தினர்.
(CS 1426) V-1 077 724 5934





# குமார் பொன்னம்பலம் நினைவேந்தல் யாழில்

யாழ்ப்பாணம், ஜன.6


மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று மாலை யாழ் கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ந்து குமார் பொன்னம்பலத்தின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதோடு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது . தொடர்ந்து குமார் பொன்னம்பலத்தின் நினைவுவுரைகள் இடம்பெற்றன.

நிகழ்வில் இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் சுகாஷ், யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம், பேராசிரியர்கள், ஊடக நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர்கள், பத்திரிகை பிரதம ஆசிரியர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-125)

### காணி வீடு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் 3 பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்புகொள்ள வேண்டாம்.)
தொடர்புக்கு:- 077 614 6434
(CS/57132) J-1

## மரண அறிவித்தல்



# குணவதி ஏரம்பு

யாழ். கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, சுவிஸ் St. Gallen ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட குணவதி ஏரம்பு அவர்கள் கடந்த 27-12-2024 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஏரம்பு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமநாதம், சின்னத்துரை, வேந்திரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சத்தியவதனி (ஜேர்மனி), இந்திரராணி (சுவிஸ்), சறோஜினிதேவி (இலங்கை), சற்குணராஜா (பிரான்ஸ்), சாந்தினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செந்தில்செல்வம் (ஜேர்மனி), குகதாஸ் (சுவிஸ்), கிரிதரன் (இலங்கை), ஜெகன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், சஞ்சய், ஜெசானி, சேசினி ஆகியோரின் ஆசைமிகு பேர்த்தியும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07-01-2025) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிமுதல் 10.30 மணிவரை Friedhof Feldli Feldli strasse 18 9000 Stgallen, Switzerland இல் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 25.07.1936
மறைவு 27.12.2024

தகவல்: தேவி (மகள்)
கிரி (மருமகன்)
076 339 6521
(CS/2188) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 06.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.